بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 5:9 ஜமாதுல் ஆகிர், 1430, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A,Email : suvanam@gmail.com, www.suvanam.com

## புறம் பேசி, கோள் சொல்லி திரிபவர்களுக்கு கேடுதான்...!

பிறரைக் குறைகூறி புறம் பேசித்திரியும் ஒவ்வொருவருக்கும் கேடுதான். இத்தகையவன் பொருளைச் சேகரித்து அதனை எண்ணிவைத்துக்கொண்டும் இருந்தான். நிச்சயமாக, தன் பொருள் தன்னை (என்றென்றும் உலகில்) நிலைத்திருக்கச் செய்யுமென்று எண்ணுகிறான். (பொருளைச் சேகரித்து வைத்துக்கொண்டு உலகில் அவனை நிலைத்திருக்கச் செய்யுமென்று எண்ணியிருந்தானே) அவ்வாறன்று ! (அல்லாஹ்வின் மீது சத்தியமாக!) ஹுதமாவில் அவன் எறியப்படுவான். (நபியே!) ;ஹுதமா ; என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லாஹ்வின் (நரக) நெருப்பாகும். அது எத்தகையது என்றால் (தேகத்தில் பட்டவுடன்) இதயங்கள் மீது சென்றடையும். (காரணம் இதயங்கள் தான் தீய கொள்கைக்கு இருப்பிடமாக இருந்தது.) நிச்சயமாக அது அவர்களை (சூழ்ந்து) மூடப்பட்டதாய் இருக்கும். நீண்ட கம்பங்களில் (அவர்கள் கட்டப்பட்டிருப்பார்கள்). சூரா: அல் ஹுமஜா

திருமறையில் இது போன்ற பல வசனங்களைக் கொண்டு அல்லாஹ் நம்மை எச்சரிக்கிறான். ஆனால் நமது முஸ்லிம் சமூகம் குர்ஆன் மொழிபெயர்ப்பை

*தொடர்ச்சி 5 ம் பக்கம் பார்க்க ...*

### உள்ளே!

நபி மொழித் தொகுப்பு - 4
இறை நினைவுகள் - 6
இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 7
தேர்தலில் பாஜக வீழ்ச்சி - 9
முடி திருத்தம் செய்யப்போகிறீகளா? கவனம் - 9
குழந்தை வளர்ச்சி - 10
போலிஸ் உடையில் திருடர்கள் - 11
அறிவுப் போட்டி - 12

## தொழுகையின் நேரத்தின் முக்கியத்தவம்

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

தொழுகைக்கு என்ன முக்கியத்துவம் கூறப்பட்டிருக்கின்றதோ அதே முக்கியம் நேரத்திற்கும் கூறப்பட்டிருக்கின்றது. சென்ற இதழில் தொழுகையின் வரிசையில் நிற்கும் ஒழுங்குகள் பற்றி தெரிந்து கொண்டோம். இந்த இதழில் தொழுகையின் நேரத்தின் முக்கியத்துவம் பற்றி தெரிந்து கொள்வோம். அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

'நிச்சயமாக தொழுகை முஃமீன்களுக்கு நேரம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது' 4.103

மேல் கூறப்பட்ட வசனத்தில் அல்லாஹ்வே தொழுகைக்கு நேரத்தை குறிப்பிட்டதாகக் கூறுகின்றான். ஒரு வேலைக்கு நேரம் குறிப்பிடப்படுவதென்பது அதனுடைய ஆரம்பத்தையும் முடிவையும் காட்டுவதாகும். இவ்வாறே ஒவ்வொரு தொழுகைக்கும் ஆரம்பமும் முடிவும் இருக்கின்றது. ஒவ்வொரு தொழுகையையும் அதன் நேரத்தில் தொழுதுவிட வேண்டும். இஸ்லாம் அனுமதித்த காரணமின்றி ஒரு தொழுகையை அதன் நேரம் தவறி தொழுவது பெரும் குற்றமாகும். அப்படித் தொழுவதை தொழுகையாக கணக்கிடப்படமாட்டாது. ஒவ்வொரு வணக்கத்திலும் சில தியாகங்களை அல்லாஹ் கடமையாக்கியிருக்கின்றான். தொழுகையிலுள்ள முக்கிய தியாகமே உரிய நேரத்தில் ஒவ்வொரு தொழுகையையும் தொழுவதாகும். ஒரு தொழுகை (சுப்ஹு) தூங்கும் நேரத்திலும், அதனால்தான் சுப்ஹுடைய அதானில் மாத்திரம் தொழுகை தூக்கத்தை விட சிறந்தது என்ற வாசகம் கூறப்படுகின்றது. இன்னுமொரு தொழுகை (லுஹர்) வேலை செய்யும் நேரத்திலும் மற்றொரு தொழுகை (அஸர் மஃரிப்) ஓய்வெடுக்கும் நேரத்திலும் இன்னுமொரு தொழுகை (இஷா) சொந்த வேலைகள் செய்யும் நேரத்திலும் கடமையாக்கப்பட்டிருக்கின்றது. அடியான் தன் பலதரப்பட்ட தேவைகளுக்குரிய நேரங்களிலும் ஒருசில மணித்துளிகளை அல்லாஹ்விற்காக அற்பணிக்கின்றானா என்பதை, இத்தொழுகையின் நேரங்களின் மூலம் அல்லாஹ் நம்மை சோதிக்கின்றான். ஒரு நாளில் ஐந்து நேரத் தொழுகையை நிறைவேற்றுவது எவ்வாறு கடமையோ அவ்வாறே ஒவ்வொரு தொழுகையையும் அதன் நேரத்தில் நிறைவேற்றுவதும் கடமையே! என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று முஸ்லிம்களில் பலர் பல தொழுகைகளை ஒரு நேரத்தில் தொழுவதை வழக்கமாக்கியிருக்கின்றார்கள். அது முற்றிலும் சரி என்றும் கருதுகின்றார்கள். இது முற்றிலும் தவறாகும். இவர் அத்தொழுகையை தொழுததாக கருதப்படமாட்டாது. அப்படித் தொழுவது கூடுமென்றிருந்தால் தொழுகைக்கு அல்லாஹ் நேரத்தை கடமையாக்கி இருப்பதில் அர்த்தமே இல்லாமல் போய்விடும். ஆகவே இஸ்லாம் நமக்கு வகுத்துத் தந்த தொழுகையின் நேரத்திற்குள் ஒவ்வொரு தொழுகையையும் எப்படியாவது தொழுது விட

வேண்டும். நபி(ஸல்) அவர்களுக்கு தொழுகையையும் அதன் ஆரம்ப முடிவு நேரங்களையும், தொழுகை கடமையாக்கப்பட்ட முதல் இரு நாட்களிலும் கற்றுக் கொடுத்துவிட்டுச் சென்ற ஜிப்ரீல்(அலை) அவர்கள் இந்த நேரத்திற்குள்தான் தொழுகையை தொழ வேண்டும் என்று கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது. (இத்தொடரில் அந்த ஹதீதை நீங்கள் கண்டு கொள்ளலாம்) எந்த ஒரு தொழுகையையும் அதன் நேரம் வருவதற்கு முன் நம்மில் யாரும் தொழுவதில்லை. காரணம் அத்தொழுகைக்குரிய நேரம் இன்னும் வரவில்லை என்ற ஒரே காரணத்திற்காகத்தான். அவ்வாறுதன் அத் தொழுகையின் நேரம் முடிந்த பின்பும் அதை தொழுவது கூடாது என்பதை யாரும் மறுக்க முடியாது. காரணம் அதற்குரிய நேரம் முடிந்து விட்டது. உதாரணத்திற்கு லுஹர் தொழுகையின் நேரம் முற்பகல் 12.25 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 3.45 மணிக்கு முடிவடைவதாக வைத்து கொள்ளுங்கள். யாராவது முற்பகல் 12.00 மணிக்கு லுஹர் தொழுகையை தொழுவார்களா? அப்படி தொழுதால் அத்தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுமா? இல்லை என்றே நாம் அனைவரும் கூறுவோம். காரணம் அதற்குரிய நேரம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. அவ்வாறுதான் 3.45மணிக்கு பின் லுஹரை தொழுவதும் கூடாது. காரணம் அதற்குரிய நேரம் முடிந்து விட்டது. இதை புத்தியுள்ள அனைவரும் அறிவர். இதைத்தான் இஸ்லாமும் கூறுகின்றது. பின்வரும் தொழுகை அட்டவணை அதை தெளிவு படுத்துகின்றது. இந்த அட்டவணை ஜித்தா நேரப்படி 23.05.1430Hம் (18.05.2009) தேதிக்கு மாத்திரம் பொருந்தும் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். காலத்திற்கு காலம் தொழுகையின் நேரங்கள் மாறும் என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**பார்க்க: அட்டவணை**

ஆனால் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக ஒரு தொழுகையை இன்னொரு தொழுகையின் நேரத்தில் தொழலாம் அவைகள் பின்வருமாறு.

### 1. பிரயாணம்

அதாவது பிரயாணி லுஹர் நேரத்தில் அஸரை முற்படுத்தியும், அல்லது அஸர் நேரத்தில் லுஹரை பிற்படுத்தியும் தொழலாம். அவ்வாறே மஃரிப் நேரத்தில் இஷாவை முற்படுத்தியும் அல்லது இஷா நேரத்தில் மஃரிபை பிற்படுத்தியும் தொழலாம்.

### 2. தூக்கம்

ஆழ்ந்த தூக்கத்தின் காரணமாக ஒரு தொழுகையின் நேரம் முடியும் வரை தூங்கி அத்தொழுகையின் நேரம் முடிந்த பின் எழுந்திருந்தால் அவர் எழுந்ததும் அத் தொழுகையை தொழலாம். அவர் அல்லாஹ்விடத்தில் குற்றம் பிடிக்கப்படமாட்டார்.

யார் தூக்கத்தினாலோ அல்லது மறதியினாலோ (தொழுகையின் நேரம் முடியும் வரை அத்தொழுகையை தொழவில்லையோ) அவர் ஞாபகம் வந்ததும் (அல்லது விழித்ததும்) அதை தொழுது கொள்ளட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### 3. மறதி

ஒருவர் மறதியின் காரணமாக ஒரு தொழுகையின்

**23.05.1430Hம் (18.05.2009) தேதி ஜித்தாவிலுள்ள தொழுகை அட்டவணை**

| இந்த நேரத்தில் தொழுவது கூடாது | தொழுகையின் ஆரம்பம் | தொழுகையின் முடிவு | இந்த நேரத்தில் தொழுவது கூடாது |
|---|---|---|---|
| 12:17 மணிக்கு லுஹர் தொழுவது கூடாது | லுஹர் தொழுகை ஆரம்பம் 12:18 | லுஹர் தொழுகை முடிவு 3:33 | 3:34 மணிக்கு லுஹர் தொழுவது கூடாது |
| 3:33 மணிக்கு அஸர் தொழுவது கூடாது | அஸர் தொழுகை ஆரம்பம் 3:34 | அஸர் தொழுகை முடிவு 6:54 | 6:53 மணிக்கு மஃரிப் தொழுவது கூடாது |
| 6:55 மணிக்கு அஸர் தொழுவது கூடாது | மஃரிப் தொழுகை ஆரம்பம் 6:54 | மஃரிப் தொழுகை முடிவு 8:24 | 8:25 மணிக்கு மஃரிப் தொழுவது கூடாது |
| 8:23 மணிக்கு இஷா தொழுவது கூடாது | இஷா தொழுகை ஆரம்பம் 8:24 | இஷா தொழுகை முடிவு 4:14 | 4:15 மணிக்கு இஷா தொழுவது கூடாது |
| 4:13 மணிக்கு சுப்ஹு தொழுவது கூடாது | சுப்ஹு தொழுகை ஆரம்பம் 4:14 | சுப்ஹு தொழுகை முடிவு 5:41 | 5:42 மணிக்கு சுப்ஹு தொழுவது கூடாது ஏனென்றால் 5:42 மணிக்கு சூரியன் உபயம். |
| மேல் கூறப்பட்ட ஒவ்வொரு தொழுகைகளையும் இந்த நேரத்தில் அதாவது அந்த நேரத்திற்கு முன் யாரும் தொழுவதில்லை காரணம் அந்த தொழுகைக்குரிய நேரம் வரவில்லை | | | ஏன் அத்தொழுகையின் நேரம் முடிந்து விட்ட இந்த நேரத்தில் தொழுவதை ஆகும் என்று கூறுகின்றீர்கள்? இந்த நேரமும் அந்த தொழுகைக்குரிய நேரம் இல்லையே! சிந்தியுங்கள் விடை கிடைக்கும். |

நேரம் முடியும் வரை அத்தொழுகையை நிறைவேற்றாமல் இன்னுமொரு தொழுகையின் நேரத்தில் ஞாபகம் வந்தால் அவர் அதே நேரத்தில் தொழுது கொண்டால் போதுமானதாகும். அல்லாஹ்விடத்தில் அவர் குற்றம் பிடிக்கப்படமாட்டார்.

யார் தூக்கத்தினாலோ அல்லது மறதியினாலோ (தொழுகையின் நேரம் முடியும் வரை அத்தொழுகையை தொழவில்லையோ) அவர் ஞாபகம் வந்ததும் (அல்லது விழித்ததும்) அதை தொழுது கொள்ளட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### 4. அரஃபா மற்றும் முஸ்தலிபாவில்

அரஃபாவுடைய நாளில் அஸரை லுஹர் நேரத்தில் தொழுவதும் முஸ்தலிபாவுடைய இரவில் மஃரிபை இஷாவுடைய நேரத்தில் தொழுவதும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும்.

மேல் கூறப்பட்ட காரணமின்றி ஒரு தொழுகையை இன்னொரு தொழுகையின் நேரத்தில் தொழுவது அர்த்தமற்ற ஒன்றாகும். அவர் அல்லாஹ்விடத்தில் குற்றவாளியாவார்.

### ஆரம்ப நேரம் சிறந்தது

ஒரு தொழுகையை அதன் நேரம் முடிவதற்கு முன் தொழுது கொண்டால் போதுமென்றிருந்தாலும் அதன் ஆரம்ப நேரத்தில் தொழுவதே சிறந்ததாகும்.

அமல்களில் சிறந்தது தொழுகையை அதன் ஆரம்ப நேரத்தில் தொழுவதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### தொழுகையின் நேரங்களை அறிந்து கொள்ளும் முறை

இன்று நம் நாள்காட்டிகளில் (காலண்டர்களில்) தொழுகையின் நேரம் குறிப்பிடப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம். அதுவே இஸ்லாம் கூறும் தொழுகையின் நேரமாகும். நமது நலன்கருதி அறிஞர்கள் அதை நமக்கு இலகுபடுத்தியிருக்கின்றார்கள். இந்த நேர அட்டவணையை ஜிப்ரீல்(அலை) அவர்களே நபி (ஸல்) அவர்களுக்கு கற்று கொடுத்தார்கள் என்பதை பின்வரும் ஹதீது தெளிவு படுத்துகின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், கஃபதுல்லாவில் இரு முறை எனக்கு ஜிப்ரீல்(அலை) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த போது எனக்கு லுஹரை தொழுவித்தார்கள் அப்போது (நிழல் செருப்பின்) வாரளவு இருந்தது. நிழல் அந்த பொருளின் அளவாக (நீளமாக) இருந்த போது எனக்கு அஸரை தொழுவித்தார்கள். நோன்பாளி நோன்பு திறக்கும் நேரத்தில் எனக்கு மஃரிபை தொழுவித்தார்கள். செம்மேகம் (சூரியன் மறைந்த போது) மறைந்த போது எனக்கு இஷாவை தொழுவித்தார்கள். நோன்பாளிக்கு குடிப்பதும் உண்பதும் தடுக்கப்பட்ட நேரத்தில் எனக்கு ஃபஜ்ரை தொழுவித்தார்கள். (இது முதல் நாள் தொழுவித்த நேரம்) அடுத்த நாள் ஒரு பொருளின் அளவு அந்த நிழல் வந்த போது எனக்கு லுஹரை தொழுவித்தார்கள். ஒரு பொருளின் நிழல் இரு மடங்கு வந்த போது எனக்கு அஸரை தொழுவித்தார்கள். நோன்பாளி நோன்பு திறக்கும் நேரத்தில் (சூரியன் மறைந்த போது) எனக்கு மஃரிபை தொழுவித்தார்கள். இரவின் மூன்றில் ஒரு பகுதி வந்தபோது எனக்கு இஷாவை தொழுவித்தார்கள். சூரியனின் மஞ்சள் (நிறம்) வருவதற்கு சற்று முன் எனக்கு ஃபஜ்ரை தொழுவித்தார்கள். பின்பு என் பக்கமாக திரும்பி முஹம்மதே! இது உங்களுக்கு முன் சென்ற நபிமார்களின் (தொழுகையின்) நேரமாகும். (ஆகவே உங்களுக்குரிய தொழுகையின்) நேரமும் இந்த இரண்டு நேரங்களுக்கு மத்தியில் இருக்க வேண்டும் எனக்கூறினார்கள். (அபூதாவூத்)

மேல் கூறப்பட்ட ஹதீதிலிருந்து நமக்கு கிடைக்கும் விளக்கங்கள்:

1. ஒவ்வொரு தொழுகைக்கும் ஆரம்ப நேரத்தையும் முடிவு நேரத்தையும் கற்றுக் கொடுத்தது அல்லாஹ்வே!

2. நமக்கு அறிமுகமில்லாத பகுதிகளுக்கோ நாடுகளுக்கோ நாம் பிரயாணம் செய்தாலும் யாருடைய உதவியுமின்றி தொழுகையின் நேரங்களை மேல் கூறப்பட்ட ஹதீதை வைத்து தெரிந்து கொள்ளலாம்.

3. ஒரு தொழுகையின் நேரம் அடுத்த தொழுகைக்குரிய நேரம் ஆரம்பிக்கும் போது முடிவடைந்து விடுகின்றது. ஆனால் சுப்ஹு தொழுகையின் நேரம் அதற்கு அடுத்த தொழுகையாகிய லுஹர் தொழுகையின் நேரம் வரைக்கும் நீடிக்காது. சூரிய உதயத்தோடு அது முடிவடைந்து விடுகின்றது.

4. அஸர் தொழுகைக்கும் இஷாத் தொழுகைக்கும் முடிவடையும் நேரம் இரண்டு வகைப்படும். ஒன்று சிறப்புக்குரிய நேரம், மற்றொன்று நிர்பந்த நேரம். அதாவது நிர்பந்த சூழ்நிலைக்கு உட்படாதவர்கள் சிறப்பிற்குரிய நேரத்திற்குள் இவ்விரு தொழுகையையும் தொழுது கொள்ள வேண்டும். சிறப்பிற்குரிய நேரத்திற்கு முன் தொழ முடியாதவர்கள் நிர்பந்தமான நேரத்திற்குள் தொழுது கொள்ள வெண்டும். அஸர் தொழுகைக்கு சிறப்பிற்குரிய நேரம் ஒரு பொருளின் நிழல் அது போன்று இரண்டு மடங்காகும் வரையாகும். அதற்குரிய நிர்பந்தத்திற்குரிய நேரம் சூரியன் மறையும் வரையுமாகும். இஷாத் தொழுகைக்கு சிறப்பிற்குரிய நேரம் இரவின் மூன்றில் முதல் பகுதி வரையுமாகும். அதற்குரிய நிர்பந்த நேரம் சுப்ஹு வரையுமாகும்.

5. ஒவ்வொரு தொழுகையையும் அதற்குரிய நேரங்களுக்குள் தொழுதுவிட வேண்டும். (முற்படுத்தியோ பிற்படுத்தியோ தொழுவது கூடாது)

உரிய நேரத்தில் தொழுகையை பேணுவதற்கு வாசகர்களுக்கு நான் கூறும் சில கருத்துக்கள்.

1. தொழுகை நேரம் வருவதற்கு சற்று முன்பே தொழுகைக்காக உளு செய்து தயாராகிக் கொள்வதை வழமையாக்கிகொள்ளுங்கள்.

2. அதற்கு முடியாதவர்கள் அதான் சொல்லப்பட்டதும் தான் செய்து கொண்டிருந்த அனைத்து காரியங்களையும் நிறுத்தி விட்டு தொழுகைக்காக தயாராகி விடுங்கள்.

3. வெளியில் சென்று கொண்டிருந்தால் அதான் சொல்லப்பட்டதும் பக்கத்திலுள்ள பள்ளியில் தொழுது விடுங்கள்.

4. பெண்கள் அவர்களின் வீட்டிலே முதல் நேரத்திலேயே தொழுவதை வழமையாக்கிக் கொள்ளுங்கள். அதற்கு ஏற்றவாறு உங்களின் வீட்டு வேலைகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு தொழுகையையும் உரிய நேரத்தில் பாதுகாத்து தொழ நம் அனைவருக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக!

# எளிமையாக வாழுங்கள்

நரகம் யார்மீது ஹராம் என்பதை உங்களுக்கு அறிவிக்கட்டுமா? மக்களுடன் நெருக்கமாக இருப்பவரும், எளிமையாக நடப்பவருமே என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், தப்ராணி, திர்மிதி : இப்னு மஸ்ஊத்(ரலி)

உங்களுக்கு முன்பு இருந்தவர்களில் ஒருவர் தமது ஆடைகளை அணிந்து ஆணவத்துடன் புறப்பட்டார். அல்லாஹ் பூமிக்குக் கட்டளையிட்டதும் பூமி அவரைப் பிடித்தது. அவர் கியாம நாள் வரை பூமிக்குள் சென்று கொண்டேயிருக்கிறார் என்று நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி, திர்மிதி : அப்துல்லாஹ் இப்னு அம்ரு(ரலி)

உங்களை விடக் கீழே உள்ளவர்களைப் பாருங்கள்! உங்களை விட மேலே உள்ளவர்களைப் பார்க்காதீர்கள்! இறைவன் உங்களுக்கு வழங்கிய அருளை அற்பமாகக் கருதாமலிருக்க இது ஏற்றதாகும் என்று நபி(ஸல்) கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மத், திர்மிதி, இப்னுமாஜா : அபூஹுரைரா(ரலி)

நபி(ஸல்) அவர்கள் சாய்ந்து கொள்ளும் தலையணை, சருகுகள் நிறைக்கப்பட்ட தோல் பையாக இருந்தது என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி, முஸ்லிம், திர்மிதி)

# உழைத்து வாழுங்கள்

நபி தாவூத்(அலை) அவர்கள், தானே உழைத்துத் தான் சாப்பிடுவார்கள் என நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி : மிக்தாத்(ரலி)

ஸகரிய்யா(அலை) அவர்கள் இரும்புக் கொல்லராக இருந்து உழைப்பவராக) இருந்துள்ளார்கள் என நபி (ஸல்) கூறினார்கள். (முஸ்லிம் : அபூஹுரைரா(ரலி)

உங்களில் ஒருவர் (உழைத்தவாறு) தன் முதுகில் விறகு கட்டைச் சுமப்பது, பிறரிடம் அவர் யாசகம் கேட்பதை விடச் சிறந்த செயலாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம் : அபூஹுரைரா(ரலி)

நீங்கள் உண்பதில் மிகச் சிறந்தது. உங்கள் உழைப்பின் மூலம் உண்பதேயாகும் என்று நபி(ஸல்) கூறினார்கள். (திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா : ஆயிஷா (ரலி).

உங்களில் (யாசகம் கேட்கும்) ஒருவனை அவனது யாசகம் கேட்ட நிலையில் (மறுமையில்) அல்லாஹ்வை சந்திக்கும் போது அவனது முகத்தில் சதை இல்லாதவனாக்கிவிடும் என்று நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி, முஸ்லிம் : இப்னு உமர்(ரலி)

# இருப்பதை போதுமாக்குங்கள்

ஆதமின் மகன், என்னுடையது என்னுடையது என்கிறான். நீ தர்மம் கொடுத்துக் கழித்ததையும், உண்டு கழித்ததையும், நீ உடுத்திக் கிழித்ததையும் தவிர உனக்குரியது ஏதும் உண்டா? என்றும், "அதிமாகத் தேடுதல் உங்கள் கவனத்தைச் சிதறடித்து விட்டது" என்றும் நபி(ஸல்) கூறினார்கள். ( முஸ்லிம், திர்மிதி : ஷிக்கீர்(ரலி)

ஆதமின் மகனே! உபரியானவற்றை நீ வழங்கினால் அது உனக்கு நல்லது உன்னிடமே வைத்துக் கொண்டால் அது உனக்குக் கெட்டது. போதுமான அளவு வைத்துக் கொள்வதற்காக நீ பழிக்கப் படமாட்டாய். நெருக்கமானவர்களிலிருந்து (கொடுக்க) துவங்கு! மேலே உள்ள கை கீழே உள்ள கையை விடச் சிறந்ததாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், திர்மிதி : அபூஉமாமா(ரலி)

உயிரைப் பற்றி அச்சமில்லாமலும், உடல் ஆரோக்கியத்துடனும் அன்றைய உணவைக் கைவசம் வைத்திருப்பவராகவும் யார் காலை நேரத்தை அடைகிறாரோ அவருக்கு உலகமே வழங்கப்பட்டது போலாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னுமாஜா, திர்மிதீ : உபைத்துல்லாஹ் பின் மிஹ்ஸன்(ரலி)

"யார் இறைவனுக்குக் கட்டுப்பட்டு தேவையான செல்வமும் கொடுக்கப்பட்டு, அச்செல்வம் அல்லாஹ்வால் போதுமானதாகவும் ஆக்கப்பட்டு விட்டதோ அவன் வெற்றியடைந்து விட்டான்", என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மத், இப்னுமாஜா, திர்மிதி : அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி)

# நோயாளிகளை நலம் விசாரியுங்கள்

உங்களில் இன்று நோன்பு வைத்துள்ளவர் யார்? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். நான் என்று அபூபக்கர்(ரலி) கூறினார்கள். உங்களில் இன்று நோயாளியை நலம் விசாரித்தவர் யார்? என்று கேட்டார்கள். நான் என்று அபூபக்கர்(ரலி) கூறினார்கள். உங்களில் இன்று ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டவர் யார்? என்று கேட்டார்கள். நான் என்று அபூபக்கர்(ரலி) கூறினார்கள். உங்களில் இன்று ஏழைக்கு உணவளித்தவர் யார்? என்று கேட்டார்கள். நான் என்று அபூபக்கர்(ரலி) கூறினார்கள்.

ஒரே நாளில் ஒரு மனிதரிடம் இந்த செயல்கள் ஒன்று சேர்ந்தால் அவர் சொர்க்கத்தில் நுழையாதிருப்பதில்லை என்று நபி(ஸல்) கூறினார்கள். (முஸ்லிம், நஸயீ : அபூஹுரைரா(ரலி)

மூன்று விஷயங்கள் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். நோயாளியை நலம் விசாரித்தல், ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்வது, தும்மியவர் அல்லாஹ்வை புகழ்ந்து கூறினால் அவருக்கு பதில் கூறுவது (ஆகிய மூன்று விஷங்களாகும்) என்று நபி(ஸல்) கூறினார்கள். (இப்னுஹிப்பான் : அபூஹுரைரா(ரலி)

யூதச்சிறுவர் நபி(ஸல்) அவர்களிடம் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவருக்கு வியாதி ஏற்பட்டது. அவரை நலம் விசாரிக்க நபி(ஸல்) அவர்கள் அவரிடம் வந்தார்கள். அவரது தலை மாட்டில் அமர்ந்து "நீ முஸ்லிமாகி விடு" என்றார்கள். அவர் தம் தலைமாட்டில் இருந்த தன் தந்தையை நோக்கினார். அவரோ "நீ அபுல் காஸிமுக்கு" கட்டுப்படு என்றார். சிறுவர் முஸ்லிமானார். நபி(ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியே வரும் போது "நரகத்தை விட்டு காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும்" என்று கூறினார்கள். (புகாரி, அபூதாவூத், நஸயீ : அனஸ்(ரலி)

☆ ☆ ☆

*புறம் பேசி ... முதல் பக்கத் தொடர்ச்சி ...*

பார்ப்பது குறைவு. நான் குர்ஆன் ஓதிக் கொள்கிறேன் என்று மட்டும் கூறுவார்கள். ஏன் சிறிய பிள்ளைகளுக்குக் கூட சென்று குர்ஆன் ஓதுங்க என்றுதான் கூறுவோம். குர்ஆன் மொழிபெயர்ப்பை பாருங்கள், படியுங்கள் என்று சொல்வது மிகவும் குறைவு. சிலர் இப்படி சொன்னவுடன் மனதுக்குள் இறையச்சத்தை உண்டாக்கும் வசனங்களை படித்த பின்பும் புறம் பேசி திரிவதை நாம் காணமுடிகிறது. சிலருக்கு புறம் பேசுவது ஒரு பொழுதுபோக்கு. அவர் புறம் பேசவில்லை என்றால் அவருக்கு தூக்கமே வராது. புறம் பேசுவதால் என்னதான் இலாபம்? யோசித்துப் பார்த்தால் ஒன்றுமே இல்லை.

ஏன் எதற்காக நாம் அடுத்தவர்களைப்பற்றி பேசவேண்டும்? நாம் நம்மைப் பற்றி யோசித்தால், நம்மிடம் உள்ள குறைகளைப் பற்றி யோசித்தால், அதை எப்படி திருத்திக் கொள்வது என்று நினைக்கவே நேரம் போதாமல் இருக்கும். தன்னிடம் குறை இல்லாமல் இருப்பவன் ஒரு போதும் மற்றவர்களின் குறையை தோண்ட மாட்டான். தன்னிடம் குறை உள்ளவன்தான் மற்றவர் குறையை தேடி சேமித்து வைப்பான். அவனுடைய நோக்கம் யாராவது என்னைப்பற்றி பேசினால் நானும் அவர்களுடைய குறையை சொல்லிக்காட்ட வேண்டும் என்பதே. யாராவது தன்னுடைய குறையைக் கூறினால் அதை நாம் திருத்தி கொள்ள முயலாமல் மற்றவறைப் பற்றி பேசுவது நமக்கு நாமே செய்யும் நஷ்டம் ஆகும். ஒருவரின் குறையை இன்னொருவரிடமே கூறி என்ன பயன்? யாரிடம் குறை உள்ளதோ அவரிடமே கூறினால் அவர் அந்தக் குறையை திருத்திக் கொள்வார் அவரிடம் கூற முடியாவிட்டால் அல்லாஹ்விடம் அவருக்காக துஆ செய்ய வேண்டும்.

ஏன் என்றால் பிறக்கும் பொழுது யாருமே கெட்டவர்களாகப் பிறப்பதில்லை, சந்தர்பமும், சூழ்நிலையும் தான் எல்லோரையும் மாற்றியமைக்கிறது. கெட்டவர்களும் நல்லவர்களாக மாற அல்லாஹ்தான் கிருபை செய்ய வேண்டும். இன்ஷாஅல்லாஹ். நமது சமுதாயம் திருந்தியவர்களை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கிறது. திருந்தியவர்களுக்கும் நாம் இடமளிக்க வேண்டும். சில சமயம் எங்களுக்கு அவர்களிடமிருந்து நிறைய நல்ல விஷயங்களை கற்றுக்கொள்ளவும் வாய்ப்புகள் இருக்கக்கூடும்.

நாம் இருவர் பேசிக்கொண்டு இருக்கும் போது நாம் நம்மைப்பற்றி மட்டும் பேசிப்பழக வேண்டும். அப்படியே மற்றவர்களைப் பற்றி பேசுவதானால் அவர்களுடைய நல்ல விஷயங்களை மட்டும் தான் பேச வேண்டும். நாம் நம்மைப் பற்றி பேசினாலும் சரி, பிறருடைய நல்ல விஷயங்களைப் பற்றி பேசினாலும் பேசி முடிந்த பின்பு நாம் யாருடன் பேசிக் கொண்டு இருந்தோமோ அவரிடம் (நான் ஏதாவது தவறாக பேசியிருந்தால் மன்னித்து விடுங்கள்.) என்று கூறிவிடுங்கள். அதே நேரம் யா அல்லாஹ் நான் தவறான முறையில் பேசியிருந்தால் அதை பொறுத்து மன்னித்துக் கிருபை செய்வாயாக என்று இறைவனிடமும் மன்னிப்பை கேட்டுக்கொள்ள பழக வேண்டும். ஏன் என்றால் மனிதர்களிடமும் சரி, இறைவனிடமும் சரி இந்த உலகத்தில் மட்டும் தான் மன்னிப்பு கேட்க முடியும் மறுமையில் நாம் என்ன நிலையில் இருப்போம் என்று யாராலும் கூற முடியாது.

நபியே! இழிந்தவனாக, அதிகமாக சத்தியம் செய்யக் கூடிய ஒவ்வொருவனுக்கும் நீர் கீழ்ப்படியாதீர். (அவன் மனிதர்களின் தன்மானங்களில்) குறைபேசித் திரிபவன், கோள் சொல்லிக் கொண்டு நடப்பவன்.

அல் கலம் : 10, 11

கோள் சொல்லுவதால் இன்று எத்தனை குடும்பத்திற்கு மத்தியில் குழப்பம், எத்தனை பேர் ஒருவருக்கொருவர் பேசாமல் இருக்கிறார்கள்? இந்த உலகில் மட்டும்தான் இந்த உறவுகள், குடும்பம், நண்பர்கள் என்ற எல்லாமே. நாம் வாழ்ந்த காலம் மிச்சம், வாழ போகும் காலம் கொஞ்சம், என்று நினைத்தால் நன்மைகளை சம்பாதித்துக்கொள்ள முடியும். இரண்டு குடும்பத்திற்கு மத்தியில் அல்லது இரண்டு நபருக்கு மத்தியில் ஒருவர் இருந்து கொண்டு இங்கு சொல்வதை அங்கும், அங்கு சொல்வதை இங்கும் சொல்வதால் என்ன கிடைக்கப் போகிறது? அப்படி இல்லாவிட்டால் ஒரு குடும்பத்தை பற்றி அல்லது ஒருவரைப் பற்றி மற்றவரிடம் தவறாக சொல்வது. அதை சொல்லி முடித்து விட்டு மற்ற குடும்பத்தில் இவர்களைப் பற்றி தவறாக சொல்வது. இந்த இரு தரப்பினருக்கு மத்தியில் கோள் சொல்பவருக்கு அல்லாஹ்விடம் அவருடைய நிலை என்ன என்று யோசித்துப் பாருங்கள். அல்லாஹ்வின் நரக நெருப்பிற்கு இரையாவது விருப்பமா? யார் யாரெல்லாம் புறம் பேசி, கோள் சொல்லி திரிகின்றீர்களோ உங்கள் நிலை நாளை மறுமை நாளில் என்னவாய் இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இறைவன் நம் அனைவரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும் இன்ஷாஅல்லாஹ்.

விசுவாசிகளே! ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்யவேண்டாம், (பரிகாசம் செய்யப்பட்ட) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மிகச் சிறந்தவர்களக இருக்கலாம், (அவ்வாறே) எந்தப் பெண்களும் மற்ற எந்த பெண்களையும் (பரிகாசம் செய்யவேண்டாம், (பரிகாசம் செய்யப்பட்ட) அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களை விட மிகச் சிறந்தவர்களக இருக்கலாம், உங்களில் சிலர் சிலரை (அவருக்கு வைக்கப்படாத) பெயர்களால் அழைக்கவும் வேண்டாம். விசுவாசம் கொண்ட பிறகு (தீயவற்றைக் குறித்துக் காட்டும்) தீய பெயர் (கூறுவது) மிக கெட்டதாகிவிட்டது. எவர்கள் (இவைகளிலிருந்து) தவ்பாச் செய்து மீளவில்லையோ அவர்களே அநியாயக்காரர்கள்.

அல் ஹுஜுராத் :11

விசுவாசிகளே! தவறான எண்ணத்தில் பெரும்பாலானவற்றை நீங்கள் தவிர்த்துக்கொள்ளுங்கள், (ஏனெனில்) நிச்சயமாக எண்ணத்தில் சிலது பாவமாகும், (எவருடைய குறைகளையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக்கொண்டிருக்கவும் வேண்டாம், உங்களில் ஒருவர் தன்னுடைய சகோதரரின் மாமிசத்தை (அவர் இறந்து) சவமாக இருக்கும் நிலையில் புசிக்க விரும்புவாரா? அப்போது அதனை நீங்கள் வெறுத்து விடுவீர்கள்.

இன்னும் நீங்கள் அல்லாஹ்வுக்கு பயந்துக்கொள்ளுங்கள், நிச்சயமாக அல்லாஹ் (பாவத்திலிருந்து தவ்பாச் செய்து மீள்வோரின்) பாவமீட்சியை மிகுதியாக ஏற்பவன், மிக்க கிருபையுடையவன்.

அல் ஹுஜுராத் : 12

நம்மில் யார் எதைச் சொன்னாலும் அதை உடனே நம்பவும் வேண்டாம். தீர விசாரனை செய்யாது எதையும் முடிவு செய்யாதீர்கள். உலகில் வாழும் வரை யாருடைய மனதையும் நோகடிக்காமலிருக்க முயற்சிக்க வேண்டும். எல்லோரையும் புரிந்துகொண்டு எல்லோருடனும் இணக்கமாக இருக்கவும், புறம் பேசாமல் கோள் சொல்லாமல் அல்லாஹ்வுக்கு ஏற்ற முறையில் வாழவும் பழகிக் கொள்ளுங்கள்.

நீங்கள் உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள், உண்மையை நன்கறிந்து கொண்டே (அதை) மறைக்கவும் செய்யாதீர்கள்.

அல் பகரா:42

நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் மறைப்பதையும், அவர்கள் பகிரங்கமாக்குவதையும் நன்கறிவான் என்பதை அவர்கள் அறியமாட்டார்களா?

அல் பகரா:77

அல்லாஹ் நம் அனைவருக்கும் இப்படிப்பட்ட தவறுகளை தவிர்ந்து நடக்க வாய்ப்பளிப்பானாக!

☆ ☆ ☆

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 25 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

## நன்மையின் எடையை கனமாக்கும் நான்கு சொற்கள்

ஒரு முறை (நபி(ஸல்) அவர்களின் மனைவி) ஜுவைரிய்யா பின்தில் ஹாரிஸ் (ரலி) அவர்களின் இல்லத்திலிருந்து நபி (ஸல்) அவர்கள் ஸுப்ஹுத் தொழுகைக்காகப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்பொழுது ஜுவைரிய்யா (ரலி) அவர்கள், தமது வீட்டில் தொழுமிடத்தில் (ஸுப்ஹைத்) தொழுது கொண்டிருந்தார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் (ஸுப்ஹுத்தொழுகை, மற்றப் பணிகளை முடித்துக் கொண்டு) நன்றாக வெளிச்சம் ஏற்பட்ட பிறகு வீடு திரும்பினார்கள். அப்பொழுது ஜுவைரிய்யா (ரலி) அவர்கள் தாங்கள் தொழுத இடத்திலேயே அமர்ந்து (திக்ரு செய்து கொண்டு) இருந்தார்கள். அதனை பார்த்த நபி (ஸல்) அவர்கள், நான் உன்னிடமிருந்து புறப்பட்டுச் சென்றதிலிருந்து இதுவரை இதே நிலையிலேயே நீ அமர்ந்துள்ளாயா? எனக் கேட்டார்கள். அதற்கவர்கள், ஆம் என்று கூறினார்கள். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள், நான் உன்னிடமிருந்து புறப்பட்டுச் சென்றபின் நான்கு சொற்களை மூன்று முறை கூறினேன். அவைகளை நீ இன்று கூறியவைகளுடன் (நீ செய்த திக்ரு, தஸ்பீஹ் அனைத்துடனும்) நிறுத்துப்பார்த்தால் நான் கூறிய சொற்களின் எடையே கனமாக(மிகைத்து) இருக்கும். அவை

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ، وَرِضَا نَفْسِهِ، وَزِنَةَ عَرْشِهِ، وَمِدَادَ كَلِمَاتِهِ.

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி அதத கல்கிஹி, வரிழா நப்ஸிஹி, வஜினத அர்ஷிஹி வமிதாத கலிமாதிஹி.

**பொருள்:** அல்லாஹ்வின் படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்கும், அவனுடைய திருப்தியின் அளவுக்கும், அவனுடைய அர்ஷின் எடை அளவுக்கும், அவனின் சொல்களின் மை அளவுக்கும், அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவன் தூய்மையானவன் எனப் போற்றுகிறேன் என்பதாகும். (முஸ்லிம்) ஜுவைரிய்யா பின்தில் ஹாரிஸ்(ரலி)

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் அவை:

سُبْحَانَ اللهِ عَدَدَ خَلْقِهِ، سُبْحَانَ اللهِ رِضَا نَفْسِهِ، سُبْحَانَ اللهِ زِنَةَ عَرْشِهِ، سُبْحَانَ اللهِ مِدَادَ كَلِمَاتِهِ.

ஸுப்ஹானல்லாஹி அததகல்கிஹி ஸுப்ஹானல்லாஹி ரிழா நப்ஸிஹி ஸுப்ஹானல்லாஹி ஜினத அர்ஷிஹி ஸுப்ஹானல்லாஹி மிதாத கலிமாதிஹி-

**பொருள்:** அல்லாஹ்வின் படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்கு, அவனைத் தூய்மையானவன் எனப் போற்றுகின்றேன். அல்லாஹ்வின் திருப்தியின் அளவுக்கு அவனைத் தூய்மையானவன் எனப் போற்றுகிறேன். அல்லாஹ்வின் அர்ஷின் எடை அளவுக்கு அவனைத் தூய்மையாவன் என போற்றுகிறேன் என்பதாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திர்மிதியின் அறிவிப்பில் (ஜுவைரிய்யாவே!) உமக்குச் சில சொற்களை (தஸ்பீஹ்களை) நான் கற்றுத் தருகிறேன். அவைகளை நீ கூறுவாயாக!

سُبْحَانَ اللهِ عَدَدَ خَلْقِهِ، سُبْحَانَ اللهِ عَدَدَ خَلْقِهِ، سُبْحَانَ اللهِ عَدَدَ خَلْقِهِ، سُبْحَانَ اللهِ رِضَا نَفْسِه، سُبْحَانَ اللهِ رِضَا نَفْسِه، سُبْحَانَ اللهِ رِضَا نَفْسِه، سُبْحَانَ اللهِ زِنَةَ عَرْشِهِ، سُبْحَانَ اللهِ زِنَةَ عَرْشِهِ، سُبْحَانَ اللهِ زِنَةَ عَرْشِهِ، سُبْحَانَ اللهِ مِدَادَ كَلِمَاتِهِ. سُبْحَانَ اللهِ مِدَادَ كَلِمَاتِهِ، سُبْحَانَ اللهِ مِدَادَ كَلِمَاتِهِ.

ஸுப்ஹானல்லாஹி அதத கல்கிஹி, ஸுப்ஹானல்லாஹி அதத கல்கிஹி, ஸுப்ஹானல்லாஹி அதத கல்கிஹி,(என மூன்று முறையும்) ஸுப்ஹானல்லாஹி ரிளா நப்ஸிஹி, ஸுப்ஹானல்லாஹி ரிளா நப்ஸிஹி, ஸுப்ஹானல்லாஹி ரிளா நப்ஸிஹி, (என மூன்று முறையும்), ஸுப்ஹானல்லாஹி ஜினத அர்ஷிஹி, ஸுப்ஹானல்லாஹி ஜினத அர்ஷிஹி, ஸுப்ஹானல்லாஹி ஜினத அர்ஷிஹி,(என மூன்று முறையும்). ஸுப்ஹானல்லாஹி மிதாத கலிமாதிஹி ஸுப்ஹானல்லாஹி மிதாத கலிமாதிஹி, ஸுப்ஹானல்லாஹி மிதாத கலிமாதிஹி (என மூன்று முறையும்) என அறிவிக்கப்பட்டுள்ளது.

☆ ☆ ☆

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 9)

- டாக்டர் ஷேக் சையது M.D.

## பெண்கள் விளை நிலங்களே!.

கடந்த இதழ் தொடர்களில் பெண் சிசுக்கள் பிறப்பதற்கு பெண்களே காரணம் என்று கருதி தாயும், சேயும் எவ்வாறெல்லாம் கொடுமைகளுக்கு உள்ளாக்கப் படுகிறார்கள் என்பது குறித்துப்பார்த்தோம். இந்தந் தொடரில் பெண் சிசு பிறப்பதற்கு பெண்கள் காரணம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்வோம்.

(نِسَاؤُكُمْ حَرْثٌ لَكُمْ فَأْتُوا حَرْثَكُمْ أَنَّى شِئْتُمْ ... (البَقرة:223)

உங்களது மனைவிகள் உங்களுக்குரிய விளை நிலங்களாகும். ஆகவே, உங்கள் விளைநிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு வாருங்கள். அல் குர்ஆன்: 2:223

இந்த வசனத்தில் பெண்களை ஆண்களின் விளை நிலங்கள் என்று குறிப்பிடுகிறான். இதனை பார்க்கும் சிலர், பெண் உரிமையின் கழுத்து நெறிக்கப்படுகிறதே| என ஓநாய் கண்ணீர் வடிக்கிறார்கள். பெண்களை வெறும் விளைநிலங்களுக்கு ஒப்பிட்டு அவர்களின் சுயமரியாதை சாகடிக்கப்படுகிறதே இஸ்லாத்தில் என்று கூச்சலிடுகின்றன இந்த ஓநாய் கூட்டங்கள். இவர்களது மயக்கு வார்த்தையில் மதியிழந்த, புதுமைப் பெண்ணுலகம் படைக்கப்போவதாக வாய்சவடால் அடிக்கும் சில அபலைப் பெண்கள் கர்ப்பப்பை சுதந்திரம் வேண்டும் என்று கோஷமிடுகிறார்கள். அதனுடைய பின்விளைவுகளின் பரிணாமத்தை புரிந்து கொள்ளாமலேயே வெற்றுக் கோஷம் எழுப்பும் இவர்கள், இந்த இறைவசனத்தின் அர்த்தத்தை சரியான முறையில் சிந்தித்து புரிந்து கொண்டால், சில வார்த்தைகள் கொண்ட இந்த வரியில் இவ்வளவு ஆழமான அர்த்தம் மறைந்திருக்கிறதா? என வியந்து போய்விடுவார்கள். தான் ஏமாற்றப்பட்டு, சுரண்டப்படுவதையும் புரிந்து கொள்வார்கள்.

## புதுமைப் பெண்ணே! உன்னைத் திரும்பிப்பார்.

குழந்தை ஆணாக அல்லது பெண்ணாக பிறப்பதற்கு, புதுமைப்பெண்ணே! நீதான் காரணம் என்று எத்தனை கொடுமைகளுக்கு உள்ளாக்கபட்டாய்! உன் கண் எதிரேயே நீ பெற்ற உன்னைச்சார்ந்த இனம் உயிரோடு மண்ணுக்குள் புதைக்கப்பட்டதே! பெண்ணுரிமை பேசப்படும் இந்த நவீன கம்யூட்டர் யுகத்தில், பெண்ணுக்கு ஆண் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த காலத்தில்தான் உன் நிலை உயர்ந்திருக்கிறதா? நீ பெற்ற பெண் சிசுவை உன் கரத்தாலேயே கொலை செய்யப்படும் அளவிற்கல்லவா நீ துன்புறுத்தப்படுகிறாய்! ஏன்? பெண்குழந்தை பிறப்பதற்கு நீதான் காரணம் என்று இந்த ஆண்வர்க்கம் கருதிக் கொண்டிருப்பதால் தான். உண்மையில் அவர்கள்தான் காரணம் என்பதை அடியோடு மறைத்தேவிட்டார்களே! குழந்தை பிறக்காவிட்டாலும் உனது பெண்மையில் தான் முதலில் இந்த ஆண் வர்க்கத்திற்கு சந்தேகம் ஏற்படுகிறது, மருத்துவப் பரிசோதனைக்கு உன்னைத்தான் உட்படுத்துகிறது. இறுதியில் பிள்ளைப்பேறு இல்லாத மலடி என்று முத்திரை குத்தப்பட்டு காலமுழுவதும் தண்டனைக்கு உள்ளாவது நீதானே! இவைகள் அனைத்திற்கும் ஆண்மகன் காரணமாக இருந்தாலும் தன்னை இந்த பரிசோதனைக்கு உட்படுத்துவதில்லை, தன்னில் உள்ள குறைகள் வெளியேறிவிடாமல் இருப்பதில் மிக கவனமாக இருக்கிறது இந்த ஆணாதிக்கம் படைத்தவவர்கள்.

இந்நிலையில் பாலைத் தீர்மானிப்பதற்கு பெண்கள் காரணமல்ல, ஆண்கள்தான் காரணம் என்ற உண்மையை இந்த வசனம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து, திணறிக் கொண்டிருந்த பெண்ணினத்தை, அவர்கள் அனுபவித்து வந்த வன்கொடுமைகளிலிருந்து விடுதலைப் பெறச் செய்து, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்துள்ளது.

குழந்தை பிறப்பதற்கு பெண் காரணம் அல்ல. அவள் ஒரு விளை நிலம். விதை விதைப்பவன் ஆண்மகன். அவன் எதை விதைக்கிறானோ அதனை அறுவடை செய்துக் கொள்வான். பெண் விதை விதைத்தால், பெண்ணையும், ஆண் விதை விதைத்தால் ஆணையும் அறுவடை செய்து கொள்வான், தன்னில் எந்த விதை விதைக்கப்படுகிறோ அதனை சரியாக பாதுகாப்பாக விளைவிப்பது மட்டும்தான் ஒரு பெண்ணின் பங்காக இருக்கமுடியும் என்ற உண்மையை இந்த இறைவசனம் தெளிவு படுத்துகிறது.

வினையை விதைத்தவன் வினையை அறுவடை செய்வான், திணையை விதைத்தவன் திணையை அறுவடை செய்வான் என்ற முதுமொழிக்கு ஏற்ப, எதை விதைக்கிறானோ அதைத்தான் அறுவடை செய்ய முடியும்.

புல்லை விதைத்த ஒரு விவசாயி நெல்லை அறுவடை செய்ய வேண்டும் என ஆசைப்படுவது எவ்வளவு பெரிய அபத்தம் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நெல்லை அறுவடை செய்ய முடியவில்லையே, வீணாப்போன இந்த நிலம் நெல்லை விளைவிக்க வில்லையே என்று அவன் புலம்பிக் கொண்டிருந்தால் அவனை பைத்தியக்காரன் என்று நாம் ஏசமாட்டமோ?

பெண் ஒரு விளைநிலம். நீ எதை விதைக்கிறாயோ அதனையே பெற்றுக் கொள்ள முடியும், அதற்கு மாற்றமாக எதையும் பெற்றுக்கொள்ளமுடியாது என்ற இந்த உண்மையை முதன் முதலில் உலகிற்கு சொன்னது இறைவேதம் குர்ஆன் அல்லவா? இதன் மூலம் எத்தனை கோடிப்பெண்களுக்கு உயிர் வாழும் உரிமை வழங்கப்பட்டுள்ளது என்று புதுமைப் பெண்ணே! சிந்தித்துப்பார்.

## மூட நம்பிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்த வசனம்.

சில வார்த்தைகளைக் கொண்ட இந்த சிறிய வசனம் பல்வேறு சமூகப்பிரச்சனைகளுக்கும், தீர்வு காண முடியாமல், நீதி மன்றங்களில் நிலுவையில் தேங்கிக் கிடக்கும் பல வழக்குகளுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் சரியான தீர்வு சொல்லிக்

கொண்டிருக்கிறது.

பின்புறமாக முன் பக்கத்தில் உடலுறவு கொள்வதால் பிறக்கும் குழந்தை பார்வை குறையுள்ளதாக (மாலைக் கண்) இருக்கும் என்று மதீனாவில் வாழ்ந்த யூதர்கள் மதத்தின் பெயரால் சொல்லி மதீனா வாழ் மக்களை நம்பவைத்து, பயமுறுத்தி வந்தார்கள். இந்த மூட நம்பிக்கையைத் தகர்ப்பதற்காகத்தான் இந்த வசனம் அருளப்பட்டது என்று பல விரிவுரையாளர்கள் கருத்துக் கூறுகிறார்கள். இதன் படி மதத்தின் பெயரால் வதந்திகளை பரப்பி வருபவர்களுக்கு மிகப் பெரும் சாட்டையடியாக இந்த வசனம் அமைகிறது.

### பெண்கள் பல ஆண்களை மணக்கலாமா?

ஒரு பெண் ஒரே நேரத்தில் பல ஆண்களை மணக்க முடியாது என்று இஸ்லாம் கூறிவருகிற சட்டத்திற்கு சரியான காரணத்தை இந்த வசனம் எடுத்துரைக்கிறது. உலக நடை முறையில் ஒரு விளை நிலத்தில் ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே பயிரிட முடியும். பலர் சேர்ந்து சாகுபடி செய்தால் எந்த பயிர் யாருக்குச் சொந்தம் என்பதைத் தீர்மானிக்க முடியாமல் பல பிரச்சனைகளும், சண்டை சச்சரவுகளும் உருவாகிவிடும். விதைவிதைத்த ஒவ்வொருவரும் உரிமை கேட்டுப் போராடுவார்கள். சமூகத்தில் வேண்டாத பிரச்சனைகள் தோன்றுவதற்கு அது காரணமாக ஆகிவிடும்.

அது போல விளைநிலமாக இருக்கும் ஒரு பெண் ஒரே நேரத்தில் ஒரு ஆண்மகனைத்தான் மணம் முடிக்க முடியும். அவ்வாறில்லாமல் ஒரே நேரத்தில் ஒரு பெண் பல ஆண்களை மணமுடித்துக் கொள்ள நேர்ந்தால், அந்த பல கணவன்களும் அவளுடன் ஒரே நேரத்தில் இல்வாழ்க்கையில் ஈடுபடுவார்கள். அப்போது அவளுக்கும் பிறக்கும் குழந்தை எந்தக் கணவனுக்குச் சொந்தம் என்பதை முடிவு செய்வதற்குள் அமர்களமான போர்களமே உருவாகிவிடும். நல்ல குழந்தையாக இருந்தால் ஒவ்வொருவரும் உரிமை கொண்டாடுவார்கள். குறையுள்ளதாக பிறந்திருந்தால் எல்லோரும் பின்வாங்கிவிடுவார்கள். அப்போது தந்தைவிலாசம் இல்லாத குழந்தைகள் உருவாகி, சமுதாயத்தின் தலைவலிகளாக வளர்வார்கள். அது போன்ற பிரச்சனைகளுக்கான தீர்வினைத்தான் இந்த வசனம் கூறுகிறது.

இன்னொரு சட்டத்தையும் புரிந்து கொள்வதற்கு இந்த வசனம் வழிவகுக்கிறது. அதாவது வசதி வாய்ப்புகள் உள்ள ஒருவன் பல விளைநிலங்களுக்கு சொந்தக்காரனாகவும், அதில் பயிரிடுவதற்கும் உரிமையுள்ளவனாகவும் இருப்பதைப் போல ஒரு ஆண் பல பெண்களை திருமணம் முடித்துக் கொள்வதற்கும் வாய்ப்புகள் உண்டு என்பதையும் இந்த வசனத்தின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. பல திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதி என்பதற்கு எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணமுடித்துக் கொள்ளலாம் என்று சிலர் தவறாக புரிந்து கொள்ளலாம் என்பதால் அதற்கான உச்ச வரம்பு நான்கிற்குள்தான் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடும் இஸ்லாத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. பல திருமணம் செய்வது அனுமதிதானே தவிர, கட்டாயமில்லை என்பதையும் இந்த இடத்தில் சேர்த்து புரிந்து கொள்ள வேண்டும்.

### விதவைகள் விறகு கட்டைகளா?

கணவனை இழந்த பெண் விதவைகள் வாழ தகுதியில்லாதவர்கள் எனக் கருதி, கணவனுடன் சேர்ந்து உடன் கட்டை ஏற்றப்பட்டு, உயிருடன் எரித்துக் கொள்ளும் கொடுமை கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் நமது நாடு இந்தியாவில் அரங்கேற்றப்படுகிறது. விதவைகள் கணவனை எரிக்கும் விறகு கட்டைகளா என்ன? இந்த கொடுமையை எதிர்த்து குரல் கொடுத்த முதல் மதம் இஸ்லாம்தான். கணவனை இழந்த ஒரு பெண், உயிர் வாழும் உரிமை இழந்தவள் என ஒதுக்கப் பட வேண்டியவளல்ல. மறுமணம் முடித்து பயனுள்ள ஒரு விளை நிலமாக இன்னொருவன் விரும்பினால் அமைத்துக் கொள்ளலாம் என்பதை இந்த வசனம் நமக்கு போதிக்கிறது. ஒருவனுக்குச் சொந்தமான நிலம் அவன் தனக்குத் தேவையில்லை என விட்டுவிடும் போது, அந்த நிலத்தை வேறொருவன் வாங்கி பயன்படுத்திக் கொள்வது எவ்வாறு இயல்பானதோ, மேலும் அந்த நிலத்தை பயன்படுத்தாமல் விட்டுவிடுவது எவ்வளவு பெரிய அறியாமையோ அது போல கணவனால் வேண்டாமென கைவிடப்பட்ட, அல்லது கணவனை இழந்த ஒரு பெண்ணை விரும்பும் மற்றொருவன் மணந்து, அவளுக்கு வாழ்க்கை கொடுப்பது இயல்பானதும், சமூகச் சீரமைப்பிற்கு அவசியமானதுமாகும் மனைவி கணவனின் விளைநிலம் என்பதால் அந்த நிலத்தை பயன்படுத்தாமல் விட்டுவிடுவது சமூகக் குற்றமுமாகும் என்பதை இந்த வசனத்தின் மூலம் புரிந்து கொள்கிறோம்.

### ஆலமரத்தை சுருட்டி விதையில் வைத்தவன் யார்?.

மனைவிகள் உங்களின் விளைநிலம் எனச்சொல்லப்பட்டதில் நாம் புரிந்து கொண்ட அர்த்தங்கள்தான் இத்தனை என்றால், இன்னும் நாம் அறியாத அர்த்தங்கள்தான் எத்தனையோ? ஆலமரத்தைச் சுருட்டி விதையில் வைத்தவன் யாரோ அவன் இறக்கி வைத்த அருள் வாக்குதான் இந்த வசனம் என்பதை நம்மையும் அறியாமல் நமது நாவு உறக்கக் கூறிக் கொண்டிருப்பது நமது செவிகளில் விழுகிறது. இந்த குர்ஆன் முஹம்மது நபி (ஸல்) என்ற ஒரு மனிதரால் சொல்லப்பட்டிருக்க முடியாது, எல்லாம் அறிந்த இறைவனிடமிருந்து அருளப்பட்டது என்பதற்கு இந்த ஒரு சிறிய வசனமே போதுமான ஆதாரமாகும். இதனைச் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு அத்தாட்சிகள் பல உண்டு.

### அறிவியல் கண்டுபிடித்தது என்ன?

மேற் கூறப்பட்ட வசனத்தின் மூலம் குழந்தையின் பாலைத்தீர்மானிப்பதில் பெண்ணுக்கு எவ்வித பங்குமில்லை என்பதை விரிவாகப்பார்த்தோம். ஆண்கள்தான் முழுக்க முழுக்க காரணமாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இன்றைய அறிவியல் ஆய்வு எவ்வாறு தீர்மானித்துள்ளது என்பதை புரிந்து கொண்டு, வாழ்க்கை நெறிகளைப் போதிக்கும் இஸ்லாமிய வேத நூலான குர்ஆன், இந்த அறிவியல் உண்மையை 1430 ஆண்டுகளுக்கு முன்பு எவ்வாறு கூறியுள்ளது என்பதை இன்ஷா அல்லாஹ் பார்ப்போம்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

# 15 வது மக்களவை தேர்தலில் பாஜகவின் வீழ்ச்சி!

நடந்து முடிந்த 15 ஆவது மக்களவை தேர்தலில் இதுவரை இல்லாத வகையில் முதன் முறையாக பாஜக மிகப் பெரிய சரிவை சந்தித்துள்ளது. சமீப காலங்களில் பாஜக, வட மாநிலங்களிலிருந்து தென் மாநிலங்களில் தன் ஆதிக்கத்தை வளர்க்கும் வகையில் கவனத்தைத் திருப்பி, பல்வேறு பிரதேச கட்சிகளுடன் கூட்டணிகளை ஏற்படுத்தி வந்தது. இதில் இம்முறை கர்நாடகாவில் சொல்லும்படியான ஆதிக்கத்தை நிலை நிறுத்த முடிந்தாலும் தமிழகம் மற்றும் கேரளாவில் கடந்த தேர்தல்களை ஒப்பு நோக்கும் போது மிகப் பெரிய சரிவைச் சந்தித்துள்ளதை அறிய முடிகிறது. கடந்த தேர்தல்களில் தமிழகத்திலுள்ள முக்கிய இரு கட்சிகளான திமுக மற்றும் அதிமுகவோடு மாறி மாறி கூட்டணி வைத்து தன் இருப்பை உறுதி செய்து வந்தது. இம்முறை தமிழகத்தில் எந்தப் பிரதான கட்சியும் பாஜகவோடு கூட்டு வைக்க தயாராகாத நிலையில் சரத்குமார், கார்த்திக் போன்றவர்களின் சிறு கட்சிகளோடு கூட்டணி வைத்து களம் கண்டது. ஆனால் பயன் ஏதும் விளையவில்லை.

அதே போன்று கேரளத்திலும் தன் ஆதிக்கத்தை வளர்க்க கடந்த பல தேர்தல்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. அதற்குத் தக்க வகையில் ஒவ்வொரு தேர்தலிலும் பாஜகவுக்குக் கேரளத்தில் வாக்கு சதவீதம் அதிகரித்தே வந்தது. ஆனால் இம்முறை, கடந்த 2004 தேர்தலோடு ஒப்பிடுகையில் சுமார் 50 சதவீதத்திற்கும் மேலான வாக்குகளை இழந்து பரிதாபமாக நிற்கின்றது.

ஒட்டுமொத்தமாக கேரளத்தில் கடந்த 2004 தேர்தலில் சுமார் 18 இலட்சம் வாக்குகளைப் பெற்ற பாஜக, இம்முறை சுமார் 8 இலட்சம் வாக்குகளை இழந்துள்ளது. அதிலும் குறிப்பாக கேரளாவின் தலைநகரமான திருவனந்தபுரம் தொகுதி மிக முக்கியமானதாகும். இத்தொகுதியில் திரு. இராஜகோபால் தனது கடுமையான கட்சி பணிகளின் மூலம் குறிப்பிடத்தகுந்த வாக்குகளைப் பாஜகவிற்குச் சம்பாதித்து வைத்திருந்தார். கடந்த 2004 தேர்தலில் இத்தொகுதியில் பாஜக சுமார், 2,20,000 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இம்முறை தேர்தலில் பாஜக வெறும் 84,094 வாக்குகளை மட்டுமே பெற்று நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்டது. அதாவது கடந்த தேர்தலை ஒப்பிடும் போது இம்முறை சுமார் 1,40,000 வாக்குகளை இத்தொகுதியில் மட்டும் பாஜக இழந்துள்ளது.

இதற்கிடையில் இத்தொகுதியில் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு தனக்கு அடுத்தபடியாக வந்த கம்யூனிஸ்டு கட்சியின் இராமசந்திரன் நாயரை விட 99,998 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சசி தரூர், ஒரு ஆர்.எஸ்.எஸ் அனுதாபி என்றும் அவரை ஒட்டுமொத்தமாக முஸ்லிம் வாக்காளர்கள் புறக்கணித்த வேளையில், தங்களுக்குச் சாதகமான சசி தரூரை வெற்றி பெற வைக்கும் நோக்கில் பாஜக திட்டமிட்டே தங்கள் வாக்குகளைச் சசி தரூருக்கு வழங்கி வெற்றி பெற வைத்துள்ளது என்றும் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

எது எப்படியோ, தென்னகத்தில் உறுதியாக கால் ஊன்ற நினைக்கும் பாஜகவிற்கு இத்தேர்தல் மர்ம அடி கொடுத்துள்ளது என்றால் மிகையில்லை!

---

# முடி திருத்தம் செய்யப் போகிறீர்களா? கவனம்!

முடி திருத்தம் செய்யும் கடைகளில் (Saloons) முடி திருத்தம் செய்வபவர்கள் (Barbers) ஒருவருக்கு முடி வெட்ட உபயோகிக்கும் கருவிகளையே மற்றவர்களுக்கும் உபயோகிப்பதினால் வேகமாக பரவி வரும் தொற்று நோய்களான ஹெபாடிடிஸ் (Hepatitis) மற்றும் எய்ட்ஸ் (Aids) போன்ற தொற்று நோய்கள் தொற்றிக் கொள்வதை தவிர்க்க ஜித்தாவில் பெரும்பாலானோர் சொந்தமாக சீப்பு, முடி மழிக்கும் கருவி, முடியை குறைக்கும் கருவி போன்ற முடி வெட்ட தேவைப்படும் சாதனங்களை வைத்துக் கொண்டுள்ளார்கள்.

ஜித்தாவை சேர்ந்த 25 வயதுடைய சவூதி இளைஞரான, தாமிர் அல் ஸைஅரி கூறுகையில் முடி திருத்தம் செய்பவரின் அலட்சியத்தினால் பிறரிடமிருந்து நம்மிடம் எய்ட்ஸ் மற்றும் தேவையில்லாத மற்ற தொற்று நோய்கள் தொற்றிக் கொள்ளும் என்ற பயத்தின் காரணமாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நான் சொந்தமாக முடி திருத்தம் செய்ய தேவையான சாதனங்களை வைத்திருக்கிறேன்.

22 வயதுடைய சவூதி இளைஞரான துருக்கி என்பவர் கூறுகையில், என்னுடைய நண்பர்கள் அவர்களுக்கு ஈரல் சம்பந்தப்பட்ட நோய்கள் முடி திருத்தம் செய்யும் கடைகளிலிருந்தே தொற்றிக் கொண்டது என்று மனப்பூர்வமாக நம்புகிறார்கள். முடி திருத்தம் செய்யும் கடைகளில் உடல் நலத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிக்கும் விஷயங்கள் அதிகமாக உள்ளன. ஜித்தாவில் மிக மிக குறைவான கடைகளில் மட்டும் தான் முடி திருத்தம் செய்பவர்கள் சுத்தமாக இருக்கிறார்கள். முடி திருத்தம் செய்பவர்கள் கையுறை (Gloves) அணிந்து கொண்டு தான் வேலை செய்ய வேண்டும். ஆனால் இங்குள்ள பெரும்பாலான கடைகளில் முடி திருத்தம் செய்பவர்கள் கையுறை (Gloves) அணிவதில்லை என்று நான் அடித்துச் சொல்வேன்.

மொராக்கோ (Morocco) நாட்டை சேர்ந்த முடி திருத்தம் செய்பவர் அல் காஸ்மி ஹஸன் கூறுகையில், சொந்தமாக முடி திருத்தம் செய்யும் சாதனங்களை வைத்துக் கொள்வது மக்களிடையே அதிகரித்து வருகிறது. செய்தித்தாள்களில் ஈரல் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் நோயைப் பற்றி அதிகமான செய்திகள் வருகின்றன. மக்கள் அதைப் படித்து மிகவும் விழிப்புணர்வோடு இருக்கிறார்கள். சவூதி அரசும் முடி திருத்தம் செய்யும் கடைகளில் ஒருவருக்கு உபயோகப்படுத்தும் பிளேடை மற்றவர்க்கு உபயோகப்படுத்தக் கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறது.

நன்றி: அரப் நியூஸ் (தொகுப்பு)

---

# குழந்தை வளர்ச்சி

குழந்தை பிறந்த செய்தி கேட்டவுடன் விவரம் தெரிந்தவர்கள் கேட்கும் கேள்வி குழந்தையின் எடை என்ன? இது பிறந்திருக்கும் குழந்தை ஆரோக்கியமானதா? இல்லையா? என்பதை அறிந்துக்கொள்ள உதவும். குழந்தைக்கு ஒரு வருடம் ஆகும் வரை குழந்தை மருத்துவ நிபுணரிடம் குழந்தையைக் காட்டி எடை, உயரம் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று சரி பார்த்துக்கொள்வோம். பிறகு குழந்தை வளர வளர உடல் நிலை ஏதும் சரியில்லை என்றால் தான் மருத்துவரிடம் செல்வோம் என்பதால் பல விஷயங்கள் நமக்குத் தெரியாமலேயே போய்விடுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் பிள்ளைகள் சரிவிகித உணவு எடுத்துக்கொள்வதே இல்லை. ஆகையால் குழந்தைகள் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் நம் குழந்தையின் வளர்ச்சி பற்றி அறிந்துக்கொள்ள முடியும். குழந்தையின் வளர்ச்சியில் உயரமும், எடையும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தந்த வயதுக்கு இருக்கவேண்டிய உயரத்துக்குரிய எடை நம் குழந்தை அடைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

## அதிக எடை

அதிக எடையோ, அல்லது குறைவான எடையோ ஆபத்தானது. கொழுக் மொழுக்கென இருக்கும் குழந்தைதான் ஆரோக்கியம் என்பது அபத்தம். உயரத்துக்கான எடை இருந்தாலே அவர்கள் ஆரோக்கியமானவர்கள் என்று அர்த்தம். அதிக எடை ஏற்படும் பொழுது குழந்தைகள் சர்க்கரை வியாதிக்குள்ளாகிறார்கள் என்பது சமீபத்திய கண்டுபிடிப்பு. அதீத உணவு, குறைவான உடற்பயிற்சி இவைதான் குண்டு குழந்தைகளுக்கான காரணங்கள். இதை தெரிந்து கொண்டு சரி செய்தால் குழந்தைகளை சரியான எடைக்கு கொண்டு வந்துவிடலாம்.

## குறைவான எடை

இந்தவகை குழந்தைகள் சந்திக்கும் பிரச்சினைகள் பல. உடலில் தெம்பில்லாது போவதால் சோம்பலாக இருப்பார்கள். அதிகம் ஓடியாடி விளையாட முடியாது. உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாததால் உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காமல் போகும். இது இவர்களின் வளர்ச்சி, கற்றல் போன்றவற்றில் பாதிப்பைத் தரும். இன்னொரு வகை பிரச்சினையும் இருக்கிறது. குடும்ப வாகு, உடல்வாகு போன்ற காரணத்தால் சில குழந்தைகள் அதிக உயரம் (வயதுக்கு மீறிய உயரம்) இருப்பார்கள். இதனால் ஒல்லியாக தெரிவார்கள். 12 வயதுக்கு 147 செ.மீ இருக்க வேண்டிய பையன் 153 இருந்தால் அதிக உயரம்.

அதிக உயரத்துக்கு தகுந்த உடல் எடை இல்லாமல் போனால் இந்தக் குழந்தையும் எடைக்குறைந்த குழந்தையின் பாதிப்புக்களுக்கு உள்ளாவான். நாம் குழந்தையின் உயரம் மற்றும் எடையைக் கண்காணித்து வரவேண்டும்.

பார்க்க: அட்டவணை

உயரம்/எடை அளவு ஆண்குழந்தைக்கு வேறு அளவு, பெண் குழந்தைக்கு வேறு அளவு என்பதை நாம் மறக்கக்கூடாது.

சரியாக கவனித்து முறையாக வளர நாம்தான் உதவ வேண்டும். ஆரோக்கியமான குழந்தைகளை வளர்ப்போம். குழந்தைகள் நலன் காப்போம்

| சராசரி ஆண் குழந்தைகளுக்கான வயது, எடை மற்றும் உயரம் | | |
|---|---|---|
| வயது | எடை (kg) | உயரம் (cm) |
| பிறந்த குழந்தை | 3.3 | 50.5 |
| 3 மாதங்கள் | 6.0 | 61.1 |
| 6 மாதங்கள் | 7.8 | 67.8 |
| 9 மாதங்கள் | 9.2 | 72.3 |
| 1 வயது | 10.2 | 76.1 |
| 2 வயது | 12.3 | 85.6 |
| 3 வயது | 14.6 | 94.9 |
| 4 வயது | 16.7 | 102.9 |
| 5 வயது | 18.7 | 109.9 |
| 6 வயது | 20.7 | 116.1 |
| 7 வயது | 22.9 | 121.7 |
| 8 வயது | 25.3 | 127.0 |
| 9 வயது | 28.1 | 132.2 |
| 10 வயது | 31.4 | 137.5 |
| 11 வயது | 32.2 | 140.0 |
| 12 வயது | 37.0 | 147.0 |
| 13 வயது | 40.9 | 153.0 |
| 14 வயது | 47.0 | 160.0 |
| 15 வயது | 52.6 | 166.0 |
| 16 வயது | 58.0 | 171.0 |
| 17 வயது | 62.7 | 175.0 |
| 18 வயது | 65.0 | 177.0 |

| சராசரி பெண் குழந்தைகளுக்கான வயது, எடை மற்றும் உயரம் | | |
|---|---|---|
| வயது | எடை (kg) | உயரம் (cm) |
| பிறந்த குழந்தை | 3.2 | 49.9 |
| 3 மாதங்கள் | 5.4 | 60.2 |
| 6 மாதங்கள் | 7.2 | 66.6 |
| 9 மாதங்கள் | 8.6 | 71.1 |
| 1 வயது | 9.5 | 75.0 |
| 2 வயது | 11.8 | 84.5 |
| 3 வயது | 14.1 | 93.9 |
| 4 வயது | 16.0 | 101.6 |
| 5 வயது | 17.7 | 108.4 |
| 6 வயது | 19.5 | 114.6 |
| 7 வயது | 21.8 | 120.6 |
| 8 வயது | 24.8 | 126.4 |
| 9 வயது | 28.5 | 132.2 |
| 10 வயது | 32.5 | 138.3 |
| 11 வயது | 33.7 | 142.0 |
| 12 வயது | 38.7 | 148.0 |
| 13 வயது | 44.0 | 150.0 |
| 14 வயது | 48.0 | 155.0 |
| 15 வயது | 51.5 | 161.0 |
| 16 வயது | 53.0 | 162.0 |
| 17 வயது | 54.0 | 163.0 |
| 18 வயது | 54.4 | 164.0 |

# போலிஸ் உடையில் திருடர்கள்

தற்பொழுது சவுதி அரேபியாவில் பற்பல இடங்களில் போலிஸ் உடையணிந்து வெளிநாட்டினரின் பொருள் மற்றும் உடமைகளை பறிப்பதில் ஒரு பெருங்கூட்டம் உலா வருவதை கருத்தில் கொண்டு சவுதி அரேபியா போலிஸ் துறை மற்றும் குற்றப்புலனாய்வு துறையினரால் கீழ்கண்ட வேண்டுகோள்களை நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காக அறிவித்துள்ளனர். இவற்றை அறிந்து நாம் விழிப்புணர்வுடன் இருப்பதுடன் நம்முடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இந்த செய்தியினை அறிவிக்குமாறு சுவனப்பாதை மாதஇதழ் மூலம் கேட்டுக் கொள்கிறோம்.

ஒருபோதும் ஒருவர் தான் போலிஸ் என்று சொன்னால் நம்ப வேண்டாம், அவர் தன்னுடைய போலிஸ் அடையாள அட்டையை காட்டினாலும் சரியே! அல்லது அவர் போலிஸ் சீருடையை அணிந்திந்தாலும் சரியே. அவர் போலிஸ் அதிகாரி என்று நீங்கள் நம்ப வேண்டும் எதுவரையெனில் அவர் உபயோகிக்கும் வாகனம் போலிஸ் அதிகாரிகளுக்குறியதாக இருந்தால் மட்டுமே (அரசாங்கத்தால் வழங்கப்பட்ட போலிஸ் வாகனமாக இருக்க வேண்டும்).

இவ்வாறானவர்கள் சட்டபூர்வமற்ற கைத்துப்பாக்கிகளையும் மற்றும் மக்களை தாக்கக்கூடிய கூரிய ஆயுதங்களையும் உபயோகிக்கின்றார்கள். அவர்கள் தாம் போலிஸ் அதிகாரிகள் என்றும் தெளிவில்லாத அரபு பாஷையிலுள்ள அடையாள அட்டையையும் காட்டுவார்கள்

ஆரம்பத்தில் இவர்களுடன் மூர்க்கத்தனத்துடன் நடப்பதை தவிர்ப்பதுடன் அவருடைய வேண்டுகோள்களை ஏற்று தங்களுடைய அடையாள அட்டை (இக்காமா)யையோ அல்லது பணப்பையையோ காட்டவேண்டாம். இவ்வாறான நேரத்தில் இவர்கள் இன்னும் பலவந்தமாகவோ மூர்க்கத்னத்துடனோ நடந்து கொண்டால் அவர்களை நீங்கள் தாக்க வேண்டும் அல்லது அக்கம்பக்கம் உள்ளவர்களுடைய உதவியை நாடி அவர்களை பிடித்து போலிஸிடம் ஒப்படைக்க முயல வேண்டும்.

இன்னும் சிலரோ, உங்களை உங்களது வீட்டிற்கு அவர்களுடைய வாகனத்தில் கூட்டிக் செல்ல அல்லது சில இடங்களை கூறி அவ்விடத்திற்கு செல்லும் வழியை கேட்பார்கள். எப்பொழுதும் உங்களுடைய வாகனத்தை சரியாக மூடிவிட மறந்து விடாதீர்கள் அதிலும் பலசரக்கு கடைகள் அல்லது பெரும் வியாபாரஸ்தலங்களில் நிறுத்தும் போது அதிக கவனம் தேவை.

இவ்வாறான நிகழ்வுகள் இப்போது வழமையாக ஒரு நாளைக்கு பத்திற்கும் மேல் ரியாத் மாநகர் வஸாரத் பகுதியிலும், அல்பத்தா, அல்மலாஸ், அல்வரூத் மற்றும் ஒலாயா, சுலைமானிய்யா பகுதிகளில் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது.

இரவில் தனியாக கடைவீதிக்கோ, சந்தைகளுக்கோ செல்வதை தவிர்த்து இருவர், மூவர் கொண்ட குழுக்களாக செல்ல வேண்டும்.

தேவைக்கு மேற்பட்ட பணத்தை தன் பையில் அல்லது பாக்கெட்டில் வைப்பதை தவிர்க்கவும்.

நாட்டின் பாதுகாப்புக்கு பொறுப்பான போலிஸ் அதிகாரிகள் இவ்வாறான திருடர் மற்றும் கொள்ளையர்களை கண்டுபிடிப்பதற்கு பொது மக்களுடைய உதவியை நாடியவர்களாக உள்ளனர் ஆனால் பெரும்பாலானோர் கொள்ளை அடிக்கப்பட்டதின் பின்னரே போலிஸாருக்கு புகார் செய்பவர்களாக உள்ளனர்.

மேற்கூறப்பட்ட செய்திகள் யாவும் போலிஸாரால் பொது மக்களாகிய எங்களுக்கு வைக்கப்பட்ட வேண்டுகோள்கலாகும். மேலும் இவ்வாறனவர்களை அவர்கள் போலிஸ் சீருடையை அணிந்திந்தாலும் நம்ப வேண்டாமெனவும் மாறாக அவர் உபயோகிக்கூயடிய வாகனம் போலிஸ் அதிகாரிக்குறியதாக இருந்தால் மாத்திரம் நீங்கள் நம்பலாம்.

குறிப்பு: இவ்வாறான நிகழ்வுகளை உடனடியாக அருகாமையில் உள்ள போலிஸ் நிலையத்திற்கு அல்லது போலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு அறிவிக்குமாறும் தங்களுடைய கையடக்கத் தொலைப்பேசியை பாவித்து அவர்களையும் அவர்களுடைய வாகனத்தை நிழற்படம் எடுத்து இவர்களை இனம் காண உதவுமாறும் வேண்டுகிறார்கள்.

மக்கள் சேவை, போலிஸ் துறை, மற்றும் குற்றப் புலனாய்வு துறை, ரியாத், சவுதி அரேபியா.

# Microsoft Excel - ன் பயன்களை தெரிந்துக் கொள்வோம் - 3

**கேள்வி:** எக்செல் டேட்டா மற்றும் சாஃப்ட்டை, வேர்ட் ஃபைலில் லிங்காக கொண்டு வந்துள்ளேன். எக்செல் ஃபைலில் ஏதாவது மாற்றங்கள் செய்தால் உடனடியாக வேர்ட் ஃபைலில் அந்த மாற்றம் தெரிகிறது. எனக்கு இப்படி வரக்கூடாது. வேர்ட் ஃபைலில் உள்ள டேட்டா நிரந்தரமாக அப்படியே இருக்க வேண்டும். என்ன வழி?

**பதில்:** Linking என்பதை நீங்கள் செய்ததற்குப் பதில் Embedding என்பதை செய்திருந்தால் இந்த பிரச்சனையே வராமல் போயிருக்கும். போனது போகட்டும். இனிமேல் நீங்கள் செய்யக் கூடியவை:

1) வேர்ட் ஃபைலைத் திறந்து கொள்ளுங்கள்

2) Edit=>Link ஆகியவற்றை கிளிக் செய்யுங்கள்.

3) உங்களது லிங்கைத் தேர்வு செய்யுங்கள்.

4) Locked என்ற செக்பாக்ஸை கிளிக் செய்து டிக் அடையாளத்தைக் கொண்டு வாருங்கள்.

5) Ok பட்டனை அழுத்துங்கள்.

**கேள்வி:** எக்செல் எப்பொழுதும் பயன்படுத்தும் Arial ஃபான்டிற்குப் பதில் வேர்ட் பயன்படுத்திக் கொண்டிருக்கிற Times new Roman ஃபான்டைப் பயன்படுத்த முடியுமா?

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 5:9

## போட்டிக்குரிய கேள்விகள்

**1. உம்ராவின் ஸயீயில் ஸஃபா மற்றும் மர்வா மலையில் என்ன செய்ய வேண்டும்?**

a. கிப்லா திசையை முன்னோக்கி தக்பீர் கட்டுவது போல் இரு கைகளையும் உயர்த்தி அல்லாஹு அக்பர் கூறவேண்டும்.

b. கிப்லா திசையை முன்னோக்கி தக்பீர் கட்டுவது போல் வலது கையை உயர்த்தி அல்லாஹு அக்பர் கூறவேண்டும்.

c. கிப்லா திசையை முன்னோக்கி துஆ செய்ய வேண்டும்.

**2. தவாஃபில் எத்தனை சுற்றுகளுக்கு மாத்திரம் ரம்ல் செய்வது சுன்னத்தாகும் (ஆண்களுக்கு மாத்திரம்)**

a. 7 சுற்றுகளுக்கும்

b. முதல் 3 சுற்றுகளுக்கு மட்டும்

c. முதல் 5 சுற்றுகளுக்கு மட்டும்

**3. பெண்களுக்கான இஹ்ராம் துணி என்ன**

a. சாதரணமாக அணியும் ஆடை

b. வெள்ளை கலரில் இஹ்ராம் அணிய வேண்டும்

c. கருப்பு கலரில் இஹ்ராம் அணிய வேண்டும்.

**4. தவாபை எங்கிருந்து தொடங்க வேண்டும்**

a. ருக்னுல் யமானியிலிருந்து

b. அஜருல் அஸ்வத் கல் மூலையிலிருந்து

c. அரைவட்டத்திலிருந்து

**5. தவாஃபின் சுன்னத்தான இரண்டு ரக்அத் தொழுகையில் எந்த துணை சூராவை ஓதவேண்டும்**

a. சூரா காபிரூன் மற்றும் சூரா இக்லாஸ்

b. சூரா பலக் மற்றும் சூரா இக்லாஸ்

c. எந்த சூராவையும் ஓதலாம்

அறிவுப் போட்டி - 5:8 க்கான பரிசு பெறுபவர் : அப்துர்ரஹீம் 0555629102

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக Abdullah,AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 5:8 க்கான விடைகள்

1. a. சூரா அல் பகரா
2. c. கடன் பற்றி
3. a. சூரா அல் கவ்தர்
4. c. சூரா அல் இக்லாஸ்
5. a. ஏகத்துவம் பற்றி

# இதயக் கசிவுகளில் ஒரு துளி......

கண்ணீர் வரவில்லை இதயத்தில் செந்நீர் கசிந்ததும் அப்போது கைகளால் தடுக்க முடியவில்லையே என்று... இந்த நொடியிலும் இறைவனிடம் ஏந்திய கைகளும் உனக்கே நம்மை இடைவெளிகளின் பின் இனைத்த அந்த சந்திப்பு அதில் உன் அழகான அவயங்கள் ஆங்காங்கே தெரிந்தாலும், அளவிலா அலங்காரங்கள் ஆக்கிரமித்த முகம். ஆங்கிலத்தில் அரைகுறை வாக்கியங்கள், தலையில் நிற்கமறுத்து தவறி விழும் தாவணியுமாய் உன் மறு(அறி)முகம். "என் இறைநேச தோழி நீ' என்று எண்ணிய உள்ளத்தை ஈட்டிக்கொண்டு தாக்கிவிட்டன...

தோழியே! நீ திருந்தியிருந்தால் சமூகத்தில் நாம் மறைந்திருப்பதில் அர்த்தமில்லையே! அன்றைய எம் முன்னோடிகள் கைகளில் செல்போனையா சுமந்தார்கள்? இஸ்லாத்தின் எதிரிகளை கொன்றழிக்க போர்வாழ் ஏந்திய கைகளவை. அயலாருடன் உறவாடுகையில் ஆபாச வார்த்தைகளை அவர்களின் நாவுகள் உச்சரிக்கவில்லை இது "அல்குர்ஆனிய' வசனங்களால் உரையாடிய அன்னையர் சுமந்த வரலாறு. இத்தனையும் கூறி உன்னிடம் காரணம் கேட்டால் உன் அன்பான கணவனின் கட்டளைகள் என்கிறாய். கணவனுக்கு கட்டுப்பட்டு கடமையை நிறைவேற்ற உன் ஹிஜாபை களைந்து விட்டாயே! சிந்தனை செய் சகோதரியே..... நம் சந்திப்பின் இன்னொரு அமர்வில் ஹிஜாப் எனும் சிப்பிக்குள் பேணப்பட்ட முத்தாய் உன் முகம் கண்டு என் கண்கள் பிரமிக்கும்வரை உன் மனமாற்றத்துடன் புறமாற்றமும் காண விழையும் உன் தோழி......

உம்மு அனீஷா